பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

17 12 2024 7 15

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, இன்று முதல் 5 நாட்களுக்கு ஆந்திரா மற்றும் தெலங்கானா மாநிலங்களில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.

2. பிரமதர் திரு நரேந்திர மோடி, ராஜஸ்தானில் 46 ஆயிரத்து 300 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களை இன்று தொடங்கி வைக்கிறார்.

3. நாட்டில் நக்சல் தீவிரவாதத்தை 2026-ம் ஆண்டுக்குள் முற்றிலும் ஒடுக்கும் நோக்கில் அரசு செயல்பட்டு வருவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா கூறியுள்ளார்.

4. விவசாயிகள் தரப்பில் இருந்து பெறப்படும் ஆலோசனைகளின் அடிப்படையில் அவர்களுக்கான நலத்திட்டங்களை மத்திய அரசு செயல்படுத்தும் என வேளாண்துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

5. 19 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை மகளிர் ட்வெண்ட்டி - ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று நேபாளத்தை எதிர்கொள்கிறது. <u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, ஆந்திரா மற்றும் தெலங்கானா மாநிலங்களில் இன்று முதல் 5 நாட்களுக்கு பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.

ஆந்திரப்பிரதேச மாநிலம் மங்களகிரியில் உள்ள எய்ம்ஸ் மருத்துவமனை மருத்துவக்கல்லூரி பட்டமளிப்பு விழாவில் குடியரசுத்தலைவர் இன்று பங்கேற்று உரையாற்றவுள்ளார்.

நாளை செகந்திராபாத்தின் போலாரமில் பல்வேறு திட்டங்களைத் தொடங்கி வைத்து புதிய திட்டப் பணிகளுக்கு அவர் அடிக்கல் நாட்டவுள்ளார்.

<<<<>>>>

ராஜஸ்தானில் 46 ஆயிரத்து 300 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களைப் பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று தொடங்கி வைக்கிறார்.

எரிசக்தி, சாலை, ரயில்வே, குடிநீர் தொடர்பான திட்டங்களைத் தொடங்கி வைத்துப் புதிய திட்டங்களுக்கு அவர் அடிக்கல் நாட்டவுள்ளார்.

11 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான 9 திட்டங்களை பிரதமர் தொடங்கி வைக்க உள்ளதாகவும், 35 ஆயிரத்து 300 கோடி மதிப்பிலான 15 புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்ட உள்ளதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

ராஜஸ்தானில் பிஜேபி அரசு பொறுப்பேற்று ஓராண்டு நிறைவடைவதை முன்னிட்டு ஜெய்ப்பூரில் நடைபெறும் பொதுக் கூட்டத்திலும் திரு நரேந்திர மோடி பங்கேற்கவுள்ளார்.

<<<<>>>>

நாட்டில் நக்சல் தீவிரவாதத்தை 2026-ம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் முற்றிலும் ஒடுக்கும் நோக்கில் அரசு செயல்பட்டு வருவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா கூறியுள்ளார்.

இடதுசாரி தீவிரவாதத்தைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக சத்தீஸ்கர் மாநிலம் ராய்ப்பூரில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் நேற்று அவர் பங்கேற்றார்.

இடதுசாரி தீவிரவாதத்தை முற்றிலுமாக ஒழிக்கும் இலக்கை அடைய பாதுகாப்புப் படைகள் கூட்டு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்

சத்தீஸ்கர் மாநிலத்தில் நக்சலைட் தீவிரவாதத்தை ஒடுக்கும் நடவடிக்கையில் கடந்த ஓராண்டில் பெரிய வெற்றி கிடைத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் சத்தீஸ்கர் முதலமைச்சர் திரு விஷ்ணு தியோ சாய், துணை முதலமைச்சர் திரு விஜய் சர்மா, மத்திய உள்துறை செயலாளர் திரு கோவிந்த் மோகன், உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

<<<<>>>>

விவசாயிகள் தரப்பில் இருந்து பெறப்படும் ஆலோசனைகளின் அடிப்படையில் அவர்களுக்கான நலத்திட்டங்களை மத்திய அரசு செயல்படுத்தும் என வேளாண்துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் பட்ஜெட்டுக்கு முந்தைய ஆலோசனைக் கூட்டத்தில் நேற்று அவர் பங்கேற்றார்.

விவசாயிகள், வேளாண் தொழில்முனைவோர், விவசாயம் தொடர்பான பல்வேறு அமைப்புகள், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் மற்றும் வேளாண் துறை சார்ந்த வல்லுநர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துகளைத் தெரிவித்தனர்.

கூட்டத்தில் பேசிய அமைச்சர், ஆலோசனைகள் ஆய்வு செய்யப்பட்டு நிதியமைச்சருக்குத் தெரிவிக்கப்படும் என்றார்.

வேளாண் துறையில் மதிப்புக் கூட்டுதல், வேளாண் விளைபொருட்களை ஏற்றுமதி செய்வோருக்கான வசதிகளை அதிகரித்தல், வேளாண் ஆராய்ச்சியை விரிவுபடுத்துதல், வேளாண் இடுபொருட்களின் விலைகளை கட்டுப்படுத்துதல் போன்றவை குறித்து ஆலோசனைகள் பெறப்பட்டுள்ளதாகவும் இவற்றை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் திரு சிவராஜ் சிங் சௌகான் தெரிவித்தார்.

<<<<>>>>

விவசாயிகளை முறைசார்ந்த நிதி சேவை கட்டமைப்புக்குள் கொண்டுவர மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக மத்திய உணவு மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

மின்னணு தேசிய கிடங்கு ரசீது அடிப்படையிலான கடன் உத்தரவாதத் திட்டத்தை நேற்று அவர் புதுதில்லியில் தொடங்கி வைத்தார்.

இந்த திட்டத்தின் கீழ், விவசாயிகள் இப்போது தங்கள் விளைபொருட்கள் மூலம் கடன் பெற முடியும் என அவர் தெரிவித்தார்.

கிடங்கு மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை ஆணையத்தில் பதிவுசெய்யப்பட்ட கிடங்குகளில் விளைபொருட்களை சமர்ப்பித்த பிறகு, விவசாயிகளுக்கு மின்னணு ரசீது வழங்கப்படும் என அவர் கூறினார்.

விவசாயிகள், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள், வேளாண் கூட்டுறவு சங்கங்கள், குறு, சிறு, நடுத்தர நிறுவனங்கள் போன்றவர்கள் இந்த திட்டத்தின் கீழ் கடன் பெற முடியும் என்று அவர் குறிப்பிட்டார்.

இந்தத் திட்டம் அறுவடைக்குப் பிந்தைய சிக்கலைகளைக் குறைக்கும் என திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்தார்.

<<<<>>>>

நாட்டில் கல்வி முறையை மேம்படுத்துவதில் தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சிலான என்சிஇஆர்டி முக்கிய பங்காற்றுவதாக மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திரப் பிரதான் கூறியுள்ளார்.

புதுதில்லியில் என்சிஇஆர்டி-இன் புதிய கலை அரங்கத்திற்கு அடிக்கல் நாட்டிப் பேசிய அவர், நாடு முழுவதிலும் உள்ள சிறந்த கல்வி நடைமுறைகளை ஒருங்கிணைத்து பாடப்புத்தகங்களை உருவாக்கும் முயற்சிகளில் என்சிஇஆர்டி ஈடுபட வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

என்சிஇஆர்டி மற்றும் பிளிப்கார்ட் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடும் நிகழ்விலும் அவர் பங்கேற்றார்.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் என்சிஇஆர்டி பாடப்புத்தகங்கள் நாடு முழுவதும் எளிதில் கிடைப்பது உறுதி செய்யப்படும் என்று திரு தர்மேந்திர பிரதான் கூறினார்.

<<<>>>

பாரம்பரிய அறிவை நவீன தொழில்நுட்பத்துடன் இணைத்துப் பயன்படுத்துவது அதிக நன்மைகளை வழங்கும் என மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் திரு ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற அறிவியல் மற்றும் பாரம்பரிய ஆய்வு தொடர்பான முன்முயற்சியின் ஐந்தாம் ஆண்டு நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர் இதனைத் தெரிவித்தார்.

பாரம்பரிய அறிவாற்றலை டிஜிட்டல்மயமாக்க அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவதாக அவர் கூறினார்.

அறிவியல் கண்டுபிடிப்புகளை வாழ்வாதார வாய்ப்புகளுடன் ஒருங்கிணைக்க வேண்டியதன் அவசியத்தை திரு ஜிதேந்திர சிங் எடுத்துரைத்தார்.

<<<>>>

நடப்பு நிதியாண்டில் ஏப்ரல் முதல் நவம்பர் வரையிலான காலகட்டத்தில் ஒட்டுமொத்த ஏற்றுமதி 7 புள்ளி ஆறு ஒன்று சதவீதம் வளர்ச்சி அடைந்துள்ளதாக மத்திய வர்த்தக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த நிதியாண்டில் நவம்பர் மாதம் வரை 536 புள்ளி இரண்டு ஐந்து பில்லியன் டாலர் மதிப்பில் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாக அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

கடந்த நிதியாண்டின் இதே காலகட்டத்தில் இது 498 புள்ளி மூன்று மூன்று பில்லியன் டாலராக இருந்தது என வர்த்தக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

ஆந்திர மாநிலம் அமராவதியில் 24 ஆயிரத்து 276 கோடி ரூபாய் மதிப்பிலான முக்கிய உள்கட்டமைப்புத் திட்டங்களுக்கு மாநில அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு தலைமையில் நடைபெற்ற ஆந்திர தலைநகர் மண்டல மேம்பாட்டு ஆணையத்தின் 43வது கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இதன்படி 103 ஏக்கர் பரப்பளவில் சட்டமன்ற கட்டடம் கட்டப்படும் என்றும் 42 ஏக்கர் பரப்பளவில் உயர்நீதிமன்ற கட்டடம் கட்டப்படும் என்றும் மாநில நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. நாராயணா கூறினார்.

இதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் அடுத்த வாரத்திற்குள் கோரப்படும் என்றும் இது தொடர்பான செயல்முறைகள் ஜனவரி மாதத்திற்குள் நிறைவடையும் என்றும் அவர் தெரிவித்தார்.

மூன்று ஆண்டுகளுக்குள் கட்டுமானப் பணிகள் நிறைவடையும் என்று திரு. நாராயணா தெரிவித்தார்.

<<<<>>>>

இந்தியா – இலங்கை இடையிலான இருதரப்பு கடற்படை பயிற்சியான ஸ்லினெக்ஸ் விசாகப்பட்டினத்தில் இன்று தொடங்குகிறது.

வரும் 20-ம் தேதி வரை இந்தப் பயிற்சி நடைபெறவுள்ளது. துறைமுக கட்டம் மற்றும் கடல்சார் கட்டம் என இரண்டு கட்டங்களாக இப்பயிற்சி நடைபெறவுள்ளது.

இந்திய கடற்படை சார்பில் ஐஎன்எஸ் சுமித்ரா கப்பலும், இலங்கை கடற்படை சார்பில் எஸ்.எல்.என்.எஸ் சயுரா கப்பலும் இந்த பயிற்சிசியில் பங்கேற்கின்றன.

இரு நாடுகளுக்கும் இடையேயான கடற்படை ஒத்துழைப்பை வலுப்படுத்தும் நோக்கில் 2005-ம் ஆண்டு முதல் இந்த பயிற்சி நடைபெற்று வருகிறது.

<<<<>>>>

ஜார்ஜியாவில் விடுதி ஒன்றில் ஏற்பட்ட விஷவாயுக் கசிவில் 11 இந்தியர்கள் உட்பட 12 பேர் உயிரிழந்தனர்.

கார்பன் மோனாக்சைடு கசிவால் அவர்கள் உயிரிழந்ததாக அந்நாட்டு உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இறந்தவர்களில் 11 பேர் இந்தியர்கள் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக அங்குள்ள இந்திய தூதரகம் கூறியுள்ளது.

இறந்தவர்களின் விவரங்களைப் பெறுவது குறித்து உள்ளூர் அதிகாரிகளுடன் தொடர்பில் இருப்பதாகவும், அவர்களின் குடும்பத்தினருக்கு அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்றும் இந்திய தூதரகம் கூறியுள்ளது.

இதனிடையே இச்சம்பவம் குறித்து ஜார்ஜியா காவல்துறை விரிவான விசாரணையை தொடங்கியுள்ளது.

<<<<>>>>

வட மாநிலங்களின் பல பகுதிகளில் கடும் பனி தொடர்ந்து நிலவும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மத்தியப்பிரதேசம், கிழக்கு ராஜஸ்தான் ஆகிய பகுதிகளில் அடுத்த 3 நாட்களுக்கு கடும் குளிர் நீடிக்கும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

சிக்கிம், அசாம், மேகாலயா ஆகிய மாநிலங்களில் நள்ளிரவிலும், அதிகாலை நேரங்களிலும் அடுத்த 2 நாட்களுக்கு கடும் பனி நீடிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தலைநகர் தில்லியில் காலை நேரங்களில் மூடுபனி நிலவும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

19 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை மகளிர் ட்வெண்ட்டி - ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று நேபாளத்தை எதிர்கொள்கிறது.

கோலாலம்பூரில் நடைபெறும் இப்போட்டி இந்திய நேரப்படி காலை மணி 11.30க்கு தொடங்குகிறது.

-------------

ப்ரோ கபடி லீக் போட்டியில் நேற்றைய ஆட்டத்தில் தில்லி – பெங்கால் அணியையும், பட்னா அணி – புனே அணியையும் வென்றன.

இன்று நடைபெறும் ஆட்டங்களில் ஹரியானா – உத்தரப்பிரதேசத்தையும், ஜெய்ப்பூர் - பெங்களூரு அணியையும் எதிர்கொள்கின்றன.

-------------

தேசிய சீனியர் மகளிர் கால்பந்து போட்டியில் தமிழகம் - ஒடிசா அணிகள் மோதிய ஆட்டம் டிராவில் முடிந்தது.

சத்தீஸ்கரின் நாராயண்பூரில் நடைபெற்ற இப்போட்டியில் இரு அணிகளும் தலா ஒரு கோல் அடித்தன.

**<<<<The End>>>>**